# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019 Vol. 5 Issue : 18 August 2019








ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சி.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் ‘இளிவரல்’ மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

### பக்தி இலக்கியம்

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் ‘கனவு’ பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

## Chief Editors


**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*


## ADVISORY TEAM


Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Salem)
Sri S.SriKantharasa (Australia)


## Editorial Team


Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Coimbatore)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)



**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
**Expressional Strategies on Cipher Discourse**
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
**Question Structure of Periyavachan Pillai Commentary**
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

<u>தற்கால இலக்கியம்</u>

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
**The mother is the epitome of this (Imayam)**
மூ.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

<u>வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்</u>

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
**Multiculturalism, psychoanalysis (background and application)**
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
**Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)**
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
**Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition**
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
**(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)**
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137


•••

மதிப்பிடப்பெற்றது

# கீழ்க்கணக்கு நூல்களில் 'இளிவரல்' மெய்ப்பாடு

The emotion of disgust in keezhkanakku

ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin[3]

**Abstarct:** The first ever Tamizh grammatical book, Tholkaappiayam (Porulathikaaram) indicates the eight types of emotions in brief and explains that each emotion occur in four different elements. By the way, the emotion of disgust occurs by the following elements namely; Oldness, Sickness, Sadness and Softness. These elements are clearly explained by the poetic lines found in the Keezhkanakku in a detailed manner. Thus, this study reveals the lines which are exposing the emotion of disgust in Keezhkanakku by applying the Tholkappiyar words.

Date of submission: 2019-05-26
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ஷா.முஹம்மது அஸ்ரின்
Email: smdazrin1998@gmail.com

**Keyword:** Tholkaappiyam, Keezhkanakku, Emotion of Disgust, Oldness, Sickness, Sadness, Softness, பாட்டு, பத்துப்பாட்டு, பதினெண் மேற்கணக்கு நூல்கள், அகம், புறம், ஆற்றுப்படை, எட்டுத்தொகை, சங்க காலத்தில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காதலையும் வீரத்தையும், ஷா.முஹம்மது அஸ்ரின்.

சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களையும் பத்துப்பாட்டு நூல்களையும் "பதினெண் மேற்கணக்கு நூல்கள்" என அழைத்தனர். இவை காதலையும் வீரத்தையும் முதன்மையாக எடுத்தியம்பின. மக்களுக்கு அறத்தையும் அறம் தவறுவதால் ஏற்படும் விளைவுகளையும் வலியுறுத்த எழுந்த 18 நூல்களைப் "பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்" என வழங்கினர். இதனை

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
*பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்*
*இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி யென்பதூஉம்*
*கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு."*[1]

என்ற வாய்மொழிப் பாடல் வழியாக அறிய முடிகிறது. இந்நூல்களில் வெளிப்படும் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியனார் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றான 'இளிவரல்' என்னும் மெய்ப்பாடு ஆய்வுப் பொருளாகின்றது.

[3] முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-620020. smdazrin1998@gmail.com, 8122508520

**மெய்ப்பாடு:**

'மெய்ப்பாடு' என்னும் சொல்லுக்குப் 'பொருட்பாடு', 'வெளிப்பாடு', 'புலப்பாடு' எனப் பல விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. மெய்ப்பாடு என்பது "உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சி, சோகம் போன்ற உணர்ச்சிகளின் உடல் வழியான வெளிப்பாடு"[2]. எனவே, மெய்ப்பாடு என்றால் உடலால் வெளிப்படுத்தும் உள்ளத்து உணர்ச்சி என்பது தெளிவாகிறது. இதனை,

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப." (தொல்.1194)*

என்ற தொல்காப்பிய நூற்பா தெளிவாக உணர்த்துகிறது.

**இளிவரல்:**

'இளிவரல்' என்னும் சொல்லை இளி + வரல் என்றும் இளிவு + அரல் என்றும் பகுக்கலாம். 'இளி' என்பதற்கு 'கலகலவெனச் சிரி', 'பரிகாசஞ் செய்', 'அவமதி' போன்ற பொருள்களும் 'இளிவு' என்பதற்கு 'இழிவு', 'நிந்தை' போன்ற பொருள்களும் அகராதியில்[3] கிடைக்கப்பெறுகிறது. 'இளிவரல்' என்பது 'இகழ்ச்சியிற் பிறப்பது' என இளம்பூரணர் உரையில் காணப்படுகிறது. இளிவரல் என்னும் மெய்ப்பாடு தனது பொருளைக் கொண்டு நான்கு நிலைகளில் தோன்றுமென்பதை,

*"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு*
*யாப்புற வந்த இளிவரல் நான்கே." (தொல். 1197)*

என்ற தொல்காப்பிய நூற்பா இளிவரல் என்னும் மெய்ப்பாடு தோன்றும் நிலைகளை விளக்குகிறது.

***1. மூப்பு***

'மூப்பு' என்னும் சொல்லுக்கு 'முதுமை', 'தலைமை' எனப் பல பொருள்களை அகராதியில்[4] காண முடிகிறது. இம்மெய்ப்பாடானது, இளமை நிலையாமையை மக்களுக்கு எடுத்தியம்பும் நோக்கில் கையாளப்பட்டுள்ளது. இதனை,

*"தோற்றம் அரிதுஆய மக்கட் பிறப்பினால்,*
*ஆற்றும் துணையும் அறம்செய்க! – மாற்றுஇன்றி,*
*அஞ்சும் பிணிமூப்பு, அருங்கூற்றுடன் இயைந்து*
*துஞ்ச வருமே துயக்கு (பழமொழி. 137)*

என்ற பாடலில் முதிய வயதில் துயக்கு (அறிவின் மயக்கம்), நோய் போன்றவை தோன்றி இழிவுபடும் முன்னரே இளமை வயதில் அறத்தினைச் செய்திடுமாறு வழியுறுத்தப்பட்டுள்ளது.

மறுபிறப்பில் இழிநிலையை அடையாதிருக்க முதிய வயதிலும் நல்லொழுக்கத்தில் இருந்து வழுவாது வாழ வேண்டும் என்பதை,

*"மறுபிறப்பு அறியாதது மூப்பு அன்று."* (முதுமொழிக்காஞ்சி. 50)

என்ற பாடலடி உணர்த்துகிறது. மேலும், வாழ்நாள் முழுவதையும் நூல்களைக் கற்கச் செலவிட்டு, இழிவு தரக்கூடிய முதுமைத் தன்மையை அடையும் முன்னரே கொடுமையான உலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும் என்பதை

"நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு, என்று எண்ணி,
தலையாயார் தம் கருமம் செய்வார்." (நாலடி.52)

என்ற பாடலானது இளமையிலேயே செல்வத்தைச் சேர்த்து இழித்தற்குரிய முதுமையை அடையுமுன்னரே நல்வழியில் பயன்படுத்த வேண்டும் என எடுத்துரைக்கிறது.

*"முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புஉள,*
*பின்னரும் பீடுஅழிக்கும் நோய்உள – கொன்னே*
*பரவன்மின் பற்றன்மின்,பாத்துஉண்மின் யாதும்*
*கரவன்மின் கத்து உண்டாம் போழ்து."* (நாலடி.92)

என்ற வெண்பா வாயிலாக விளக்குகிறது. கபிலர் தனது நூலில்,

*"இளமையை மூப்புஎன்று உணர்தல் இனிதே"* (இனியவை நாற்பது.37)

என்ற அடியில் முதிய வயதில் மூப்பை உணர்வதைக் காட்டிலும் இளமை வயதில் மூப்பை உணர்வது நன்று என்கிறார்.

2. பிணி

'பிணி' என்னும் சொல்லுக்கு 'நோய்', 'துன்பம்' ஆகிய பொருள்கள் அகராதியில்[5] காணப்படுகிறது. நோயும் துன்பமும் உலக உயிரினங்களின் இளமை வயதிலோ அல்லது முதுமை வயதிலோ தோன்றி இழிவை உண்டாக்கும் என்பதை,

*"மூத்த இடத்துப்பிணி இன்னா" (இன்னா நாற்பது. 21)*
*"குழவிகள் உற்றபிணி இன்னா" (இன்னா நாற்பது. 35)*
*"குழவி பிணிஇன்றி வாழ்தல் இனிதே" (இனியவை நாற்பது. 12)*

ஆகிய பாடலடிகளில் மூத்தோர் அடையும் பிணியும் குழந்தைகள் அடையும் பிணியும் துன்பத்தை உண்டாக்கும் எனக் கபிலர் உரைக்கிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவ நூல்களாகத் திகழும் ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் ஆகிய மூன்றும் பிணியைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளன.

*"பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்" (திரிகடுகம்.88)*

என்ற பாடலடியில் பிணி ஒருவனுக்கு வருத்தத்தை உண்டாக்கவல்லது என நல்லாதனார் கூறுகிறார். மேலும், கணிமேதாவியார் தனது நூலில்,

*"இளமை கழியும் பிணிமூப்பு இயையும்"* (ஏலாதி. 21)

என இளமை திரிந்து முதுமையும் பிணியும் இயைந்து நீங்காத வருத்ததை உண்டாக்கும் என்கிறார்.

*"காத்து உண்பான் காணான் பிணி."* (சிறுபஞ்சமூலம், 7)

என்ற அடி வாயிலாக குற்றமற்ற செல்வத்தினால் கிடைக்கப்படும் உணவை உண்பவன் பிணியின்றி வாழ்வான் எனக் காரியாசான் கூறுகிறார். இக்கருத்தையே கூடலூர்க்கிழாரும் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*"உண்டி வெய்யோர்க்கு உறு பிணி எளிது" (முதுமொழிக்காஞ்சி.77)*

நாலடி நானூறும் நான்மணிக்கடிகையும் பெண்களின் சில குணங்களும் செயல்களும் பிணியை உண்டாக்கும் எனக் கூறுகிறது. இதனை விளம்பிநாகனார், வருவதறியாத பெண்டிர் நோய்க்கு ஒப்பாவர் என்கிறார்.

*"பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்" (நான்மணிக்கடிகை. 32)*

*"...சிறுகாலை*

*அட்டில் புகாதாள் அரும்பிணி." (நாலடியார். 363)*

என்ற பாடல் காலை நேரத்தில் அடுக்களையிற் சென்று உணவு சமைக்காதவள் தன் கணவனுக்குக் கொடிய பிணியாவாள் என்கிறது.

**3. வருத்தம்**

'வருத்தம்' என்னும் சொல்லுக்கு 'துன்பம்', 'களைப்பு', 'நோயாளியின் அபாய நிலை' எனப் பல பொருள்களைச் சங்க இலக்கியச் சொல்லடைவு குறிப்பிடுகிறது. மனிதனை அடையும் முதுமையும் பிணியும் அவனுக்கு நீங்காத வருத்தத்தை ஏற்படுத்தி இளிநிலையை ஏற்படுத்தும். பலரைத் துணையாகக் கொண்டு முறை அறியாது செய்யப்படும் செயல் வருத்தத்தை தரும் என்பதைத் திருவள்ளுவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்,

*"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
*போற்றினும் பொத்துப் படும்." (குறள். 468)*

பழமொழி ஆசிரியரான முன்றுரையரையனார் குற்றமற்ற செயலைச் செய்யும் மனிதருக்கு வருத்தம் விளைவதில்லை என்பதை நயமிக்க அடிகளால் விளக்கியுள்ளார்.

*"ஒடுந்தார்க்கு இல்லை பெருக்கம்; வடுந்து அற*
*வல்லதற்கு இல்லை, வருத்தம்;" (பழமொழி. 319)*

ஒருவனுக்குத் தன் வாழ்வில் பல வழிகளில் பலவற்றை எண்ணி வருத்தம் ஏற்படலாம். ஆனால், பிற உயிர்கள் இன்புற்று வாழத் தன்னை வருத்தி வாழ்பவர் அடைவது வருத்தமில்லை என்கிறார்.

*"வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று." (முதுமொழிக்காஞ்சி.47)*

**4. மென்மை**

'மென்மை' என்னும் சொல்லுக்கு 'மிருதுத்தன்மை' என்ற பொருளை "சங்கச் சொல்லடைவு அகராதி" தருகிறது. தெய்வப்புலவர்,

*"நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க*
*மென்மை பகைவர் அகத்து." (குறள். 877)*

என்னும் குறளடியில் ஒருவன் தனது பலவீனத்தை(மென்மையை) பகைவர்க்கு வெளிப்படுத்தினால் துன்பத்தை உண்டாக்குமெனக் கூறுகிறார். சமணர்களால் இயற்றப்பட்ட நாலடிநானூறும் மென்மையைப் பின்வரும் பாடலடியால் விளக்குகிறது.

"மெல்லிய நல்லாருள் மென்மை" (நாலடி.188)

என்ற அடி, மென்மைத் தன்மையுடைய பெண்களிடம் மென்மையாக நடந்து கொள்ளாவிடின் நீங்காத வருத்தத்தை உண்டாக்கும் என்கிறது..

## முடிவுரை

மனிதன் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளை மெய்ப்பாடு என்பர். அதனை எட்டு வகையாகப் பகுத்துள்ளனர் பழந்தமிழர். அத்தகு மெய்ப்பாடுகளுள் இளிவரல் என்னும் மெய்ப்பாட்டை நான்கு நிலைக்களனாகப் பகுத்து விளக்கியுள்ளது தொல்காப்பியம். இளிவரல் மெய்ப்பாட்டுணர்வைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள பல பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தி.வை.சதாசிவ பண்டாரத்தார்,(1977), பக்கம்.29, தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250–600), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
2. Tamil Oxford Living Dictionary
3. திவான்பஹதூர் ச.பவானந்தம் பிள்ளை, (1925), பக்கம்.66, தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை.
4. மேலது. பக்கம்.96.
5. மேலது. பக்கம்.346.

## பயன்பட்ட நூல்கள்


- சதாசிவ பண்டாரத்தார் தி.வை., 1977, *தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250–600)*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
- சுப்பிரமணியன் ச.வே., 1998, *தொல்காப்பியம் தெளிவுரை*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- ..., 2008, *தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- தமிழ்த்துறை ஆசிரியர்கள், 2012, *தமிழ் இலக்கிய வரலாறு*, ஜமால் முகமது கல்லூரி வெளியீடு, திருச்சி.
- பவானந்தம் பிள்ளை ச.(தொ.ஆ.), 1925, *தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி*, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை.